




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.6.2025) வேலூர், அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற விழாவில், தரை மற்றும் ஏழு தளங்களுடன் 197 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அரசு வேலூர் பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையை திறந்து வைத்தார். இந்த விழாவில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ். ஜெகத்ரட்சகன், கதிர்ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தகுமார், திருமதி அமலு, கார்த்திகேயன், ஈஸ்வரப்பன், வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.வே.இரா.சுப்புலெட்சுமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.6.2025) வேலூர், அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற விழாவில், வேலூர் மாவட்டத்தில் 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 7 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கூடுதல் கட்டடங்கள் மற்றும் 2 துணை சுகாதார நிலையங்களுக்கான புதிய கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த விழாவில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ். ஜெகத்ரட்சகன், கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தகுமார், திருமதி அமலு, கார்த்திகேயன், ஈஸ்வரப்பன், வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.வே.இரா.சுப்புலெட்சுமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.6.2025) வேலூர், அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற விழாவில், தரை மற்றும் ஏழு தளங்களுடன் 197 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அரசு வேலூர் பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்த விழாவில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ். ஜெகத்ரட்சகன். கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தகுமார், திருமதி அமலு, கார்த்திகேயன், ஈஸ்வரப்பன், வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார். பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.வே.இரா.சுப்புலெட்சுமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.6.2025) வேலூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வேலூர் மாவட்ட வருவாய் வட்டங்களுக்குட்பட்ட கிராமங்களில் ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் வீடு கட்டி வசித்து வரும் நபர்களுக்கு ஒருமுறை சிறப்பு வரன்முறை திட்டத்தின் கீழ் மற்றும் பல்வேறு திட்டங்களின் கீழ், நிலங்களை வரன்முறை செய்து 21,776 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் அடையாளமாக 12 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ். ஜெகத்ரட்சகன், கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.வே.இரா.சுப்புலெட்சுமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




வேலூரில் அரசு விழாக்களில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (25.6.2025) வேலை வேண்டி மனு அளித்த கூலித் தொழிலாளி திருமதி. பொற்செல்விக்கு, அவரது ஏழ்மை நிலையை கருதி உடனடியாக காட்பாடி அன்னை சத்யா காப்பகத்தில் விடுதிக் காவலர் பணிக்கான பணி நியமன ஆணையினை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ். ஜெகத்ரட்சகன், கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.வே.இரா.சுப்புலெட்சுமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## வேலை கேட்டு மனு அளித்த கூலித் தொழிலாளிக்கு

# முதல்வர் மு.க.ஸ்டாலின் உடனடியாக பணி நியமன ஆணை!

## பணி ஆணை பெற்றவர் ஆனந்தக் கண்ணீர்!

**வேலூர், ஜுன்.27-**

***முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேலூர் சுற்றுப் பயணத்தின்போது நேற்று முன்தினம் (25.6.2025) வேலை வேண்டி மனு அளித்த கூலித் தொழிலாளி திருமதி. பொற்செல்வி என்பவருக்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து காட்பாடி அன்னை சத்யா காப்பகத்தில் விடுதிக் காவலராக நியமனம் செய்து, அதற்கான பணி நியமன ஆணையினை வழங்கினார்.***

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.6.2025) வேலூர் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்கள்.

அப்போது, காட்பாடி வட்டம் சேர்க்காடு கிராமத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளி பொற்செல்வி என்பவர் முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனு ஒன்றை அளித்தார். அதில் அவர் ஆதரவற்ற நிலையில் வறுமை சூழ்நிலையில் வாழ்வதாக மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

முதலமைச்சர் அவர்களிடம் திருமதி. பொற்செல்வி வழங்கிய கோரிக்கை மனுவில் தனக்கு இரண்டு பெண் குழந்தைகள் இருப்பதாகவும், தன்னுடைய மாமனார் ஒரு மாற்றுத்திறனாளி என்பதாலும் அவர்கள் அனைவரையும், தான் கூலி வேலை செய்து காப்பாற்றி வருவதாகவும் தெரிவித்து தனக்கு ஏதேனும் ஒரு அரசுப் பணி வழங்க வேண்டும் என்று கோரி இன்று காலை விண்ணப்பம் மனு அளித்தார்

திருமதி பொற்செல்வி அவர்களின் ஏழ்மை நிலையை பரிவோடு கருதி, அவரது மனுவை உடனடியாக ஏற்றுக்கொண்டு, முதலமைச்சர் அவர்கள் திருமதி.பொற்செல்விக்கு ரூபாய் 17,000 மாதச் சம்பளத்தில் காட்பாடி அன்னை சத்யா காப்பகத்தின் விடுதி காவலருக்கான பணி நியமன ஆணையை அவரிடம் வழங்கினார்.

***முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனு அளித்த சில மணி நேரங்களில், பண நியமன ஆணை கிடைத்ததால், அதனை பெற்றுக் கொண்ட பொற்செல்வி அளவில்லாத மகிழ்ச்சியோடு, முதலமைச்சர் அவர்களை வணங்கி நன்றி தெரிவித்தார்.***

## இமாச்சலப் பிரதேசத்தில் கனமழை: 20 பேர் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டனர்!

சிம்லா, ஜுன். 27–

இமாச்சலப் பிரதேச மாநிலத்தில் மெகா வெடிப்பு காரணமாக பெய்து வரும் கனமழையால் ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. பியாஸ் – காங்க்ரா கரைபுரளும் வெள்ளத்தில் தர்மசாலா நீர் மின் திட்டத்தில் ஈடுபட்டு இருந்த 20 தொழிலாளர்கள் அடித்து செல்லப்பட்டனர். இமாச்சலப் பிரதேசத்தில் மேக வெடிப்பு காரணமாக கன மழை வெளுத்து வாங்குகிறது. காங்க்ரா மாவட்டத்தில் பெய்த கனமழையால் யாஸ் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஆற்றில் கரைபுரளும் வெள்ளத்தில் தர்மசாலா நீர் மின் திட்டத்தில் ஈடுபட்டு இருந்த 20 தொழிலாளர்கள் அடித்து செல்லப்பட்டனர். அவர்களை தேடும் பணியில் மீட்பு குழுவினர் ஈடுபட்டுள்ள நிலையில், இருவரது உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக மீட்புக் குழுவினர் தெரிவித்தனர்.



திருப்பூர் மாவட்டம், கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கத்தில் திருப்பூர் கிழக்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டல தலைவர் இல.பத்மநாபன் உள்பட மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.